## ஸ்ஸ்ஸ்...

புரோக்கர் வரதப்பிள்ளை வந்து நின்றபோது கணக்குப் பிள்ளையை வைத்துக் கொண்டு தன் ஊழியர்களுக்கு போனஸ் தொகையைப் பட்டுவாடா செய்தபடி இருந்தார் முதலாளி என்று வேலூர் வட்டாரமே கூப்பிடும் வெங்கடாஜலபதிக் கவுண்டர்.

''வாய்யா... சொன்ன டயத்துக்கு பத்து நிமிஷம் முந்தியே வந்துட்டியே.''

கவுண்டர் வரதப் பிள்ளையை வரவேற்றுப் பேசிய விதத்தில் ஒரு வித நெருக்கம் பளிச்சென்று தெரிந்தது.

வரதப்பிள்ளை அதைக் கேட்டு ரேஷன் சர்க்கரை போல எடை குறைவான ஒரு சிரிப்பு சிரித்தார்.

''அப்ப பொறப்படுவமா?''

''ஆகா.''

அடுத்த சில நிமிடங்களில் கவுண்டரின் வெள்ளை டாடா சுமோ வரதப்பிள்ளையோடும் கவுண்டரின் ஒரே மகன் ராஜ்குமாரோடும் கவுண்டரின் அந்த ஆயில் மில்லை விட்டு நீங்கத் தொடங்கியது.

உள்ளே வரதப்பிள்ளை தன் தொழில் சாதுர்யங்களோடு பேச ஆரம்பித்து விட்டார்.

''முதலாளி... தோப்ப பார்த்தா அசந்து போயிடுவீங்க. ஒவ்வொரு தென்ன மரமும் அமிதாப்பச்சன் மாதிரி அம்புட்டு ஒசரம். அம்புட்டு ஊட்டம்.''



''யோவ்... ஒளறாதய்யா...! நாங்க தோப்ப வாங்க நினைக்கறது தேங்கா. பிடுங்கி எண்ணெய் ஆட்றதுக்கு இல்ல. அங்க ஒரு ரைஸ் மில் கட்றதுக்காக...''

பிள்ளை முகம் அதைக் கேட்ட மறுநொடி ஒரு மாதிரி மாறியது. கார் ஓடிக் கொண்டிருந்தது.

''என்னய்யா சவுண்டக் காணோம்?'' - கவுண்டர் நிமிண்டினார்.

''இல்ல.. இப்படி ஒரு எண்ணம் இருக்கறத முதலாளி சொல்லலீங்களே...''

''இது என்னய்யா கதையா இருக்குது! நான் எதுக்கு தோப்ப வாங்கப் போறேங்கறதை எல்லாம் உன்கிட்ட சொல்லணுமா என்ன?''

''அப்படி இல்லீங்க... ரைஸ் மில்லு கட்றதா இருந்தா தோப்பை அழிக்க வேண்டி வரும் தானுங்களே...?''

''ஆமா... சப்ஜாடா மரத்தை வெட்டிட்டு நல்லா புல்டோசரை உட்டு சமதளமாக்கினாத்தானே மில்லுக்கு கட்டுமானத்துக்கு தோதா இருக்கும்.''

கவுண்டரின் பதில் திரும்பவும் பிள்ளையை மௌனத்தில் போட்டுப் புதைத்து அவர் முகத்தில் சங்கடப் பிசைவையும் காட்டிற்று.

''இல்லீங்க. இது சரிப்பட்டு வராதுங்க. முதலாளி, நீங்க குடும்பம் குட்டியோட நல்லா இருக்கணுங்க. உங்கள நம்பி நூத்துக்கணக்கான குடும்பங்க இருக்குது. அத நான் கெடுக்க விரும்பலைங்க.''

''யோவ் புரோக்கர்... என்ன காரணம்னு சொல்லிட்டு அப்புறமா நீ பூசி மெழுகுய்யா. என்னய்யா காரணம்?''

★ ★ ★

கிட்டத்தட்ட பத்தடி உயரம் இருந்தது அந்தப் பாம்புப் புற்று!

ஏகத்துக்கும் துவாரக் கூம்புகள். மேலெல்லாம் மஞ்சளும் குங்குமமும் வாரிக் கொட்டப்பட்டிருக்க, அடிப்பரப்பில் ஐம்பது அறுபது அசல் தீபங்கள். அதில் சில எரிந்து கொண்டிருக்க, பல தீபங்கள் அணைந்து கிடக்க, அங்கங்கே முட்டைக் கூடுகளும் கிடந்தன.

முன்னால் ஒரு பெண் விழுந்து கும்பிட்டுக் கொண்டிருந்தாள்.

''இதாங்க காரணம்! சாதாரண புத்து இல்லீங்க இது... நூறு வருஷத்துக்கும் மேலா இருக்குது. உள்ள ஒரு ராஜநாகம் இருக்கறதாவும் பாத்தவங்க சொல்றாங்க. இதுகிட்ட நின்று கும்புட்டா நினைச்சது நடக்குது... வேற மாதிரி நினைச்சா..''

- பிள்ளை கொஞ்சம் பயத்தோடு இடைவெளி விட்டார்.

''நினைச்சா?'' - ராஜ்குமார் திரும்பியபடி கேட்டான்.

''வேணாம் முதலாளி... இங்க நின்னு பேச வேண்டாம். இந்தத் தோப்பை வாங்கறவங்க புத்துக்கு பங்கமில்லாம வாங்கிக்கறதா இருந்தாதாங்க நல்லது. தோப்புச் சொந்தக்காரரும் அதைத்தான் விரும்பறார். இதை அழிக்க நினைச்சா நினைச்சவங்க அழிஞ்சு போயிடறாங்க.''

- பிள்ளை திரும்பி நடந்தபடி சொன்னதைக் கேட்டு ராஜ்குமார் வாய்விட்டுச் சிரித்தான்.

''என்னப்பா... இந்த ஆள் பேச்சக் கேட்டுப் பயந்து வாங்காம விட்டுடலாமா - இல்ல வாங்கிடுவோமா?'' என்றான்.

''கட்டாயம் வாங்கறோம் ராஜ்குமார். ஆனா அந்தப் புத்தமட்டும் பிள்ளை சொன்ன மாதிரி ஒண்ணும் பண்ண வேண்டாம்.'' என்று கமறினார்.

''அட என்னப்பா நீங்க... அந்த ஆள்தான் ஏதோ உளர்றாரு. நீங்களும் அதுக்கு பயந்துக்கிட்டு.''



''இல்லடா... உலகத்துல சில விஷயங்களை நாம ரொம்ப நோண்டிப் பாக்கக் கூடாது. சாமி இல்ல, பூதம் இல்லன்னு பேசறவன் கூட ரகசியமா சாமி கும்பிடறத நான் பார்த்தவன். உனக்கு அனுபவம் பத்தாது. விட்று...''

- கவுண்டர் தீர்மானமாகத்தான் சொன்னார்.

''ஆமாம் தம்பி... அப்பா பேச்சக் கேளுங்க. இப்படித்தான் ஒருத்தர் அந்தப் புத்தை இடிக்கப் போய்ட்டார். கடப்பாரையை ஓங்கவும் உள்ளிருந்து சீறிக்கிட்டு பாம்புங்க வந்துச்சு. சாமி கும்பிட வந்தவங்க வேண்டாங்க விட்றுங்கன்னாங்க. அவரு கேக்கலை. பாறைக்கு வைக்கற வெடியை வெச்சு தூள் தூளாக்கிப்புடறேன் பார்னுட்டு திரும்பிப் போனார். போன மனுஷன் திரும்பல தம்பி. ராத்திரி படுத்துத் தூங்கும் போது நாகம்மா போய் ஒரே போடா போட்டுத் தள்ளிட்டா. விடிஞ்சு பார்த்தா கருநீலத்துல நுரை தள்ளிக் கிடந்துச்சு உடம்பு. அதுல இருந்து யாருக்கும் தைரியமில்ல....''

- பிள்ளை உகந்த ஏற்ற இறக்கங்களோடு சொல்லி முடிக்க, ராஜ்குமார் அதைக் கேட்டுத் திரும்பவும் சிரித்தான். பின் ''நல்லபடியா ரேட்டைப் பேசிமுடிங்க. இந்த டுபாக்கூர் கதையை எல்லாம் நான் சாவகாசமா கேட்டுக்கறேன்'' என்றான்.

பத்திரப் பதிவெல்லாம் முடிந்து விட்டது. தோப்பில் இன்ஜினீயர் நீள அகலத்தை சகாக்களோடு அளந்து கொண்டிருந்தார்.

ராஜ்குமார் மரங்களைக் காட்டி யாரோ ஒரு ராவுத்தருடன் பேசிக் கொண்டிருந்தான்.

''மொத்தமா முன்னூத்தி சொச்சம் மரம். அப்படியே அறுத்து எடுத்துக் கிட்டுப் போயிடுங்க. வேரோட பேத்தெடுத்துக்கத் தேவையில்ல. நான் புல்டோசர் வெச்சுப் பாத்துக்கறேன்.''

ராவுத்தர் கவலையோடு திருப்பிக் கேட்டார்.

‘‘மரம் நல்ல சத்தா ஊட்டமா இருக்குதுங்களே... வெட்டத்தான் வேணுமா?’’

‘‘அது சரி... நீங்கள் ஏதாவது கதை சொல்லாம காரியத்தை முடிக்கப் பாருங்க...’’ என்று சொன்னபடி திரும்பிய போது ராஜ்குமாரின் பி.ஏ. சில பாம்பாட்டிகளோடு வந்தபடி இருந்தான்.

நெருங்கியவன் ‘‘சார்... இவங்க பாம்புகள பிடிக்கற இருளர்ங்க. நீங்க சொன்னமாதிரி கூட்டிக்கிட்டு வந்துருக்கேன்.’’

‘‘வெரிகுட். அதோ புத்து - போய் ஒரு பாம்பு விடாம பிடிச்சுக்கிட்டுப் போகச் சொல்லுங்க. எல்லா பாம்பையும் பிடிச்சு முடிச்ச உடனே இவங்களே புத்தை இடிச்சுடணும் என்ன?’’

ராஜ்குமார் சொன்னதை கேட்ட இருளர் ஒருவன் இடையிட்டான்.

‘‘சாமி... பாம்ப வேணா மகுடி ஊதிப் பிடிப்போம். புத்தல்லாம் தட்ட மாட்டோம்.’’

‘‘ஏய்யா...?’’

‘‘எங்களுக்கு சோறு போடற கோயிலுங்க அது.’’

‘‘கோயிலா... ஆமா கோயிலுக்குள்ள இருக்கற சாமிய புடிப்பீங்க. ஆனா புத்த இடிக்கமாட்டீங்களா?’’

‘‘பாம்ப புடிச்சாலும் சாமிப்பாம்பு இருந்தா அதை ஒண்ணும் செய்ய மாட்டோம்ங்க. காட்டுல கொண்டு போய் உட்டுடுவோம்ங்க...’’

‘‘பாம்புல சாமிப் பாம்புன்னு ஒண்ணு இருக்கா?’’

‘‘ஆமாங்க. அது எங்களுக்குத் தான் தெரியும். ராம படம் நல்லா சுத்தமா இருக்கும்ங்க.’’

- அவர்கள் - பேசப்பேச எல்லாமே - ராஜ்குமாருக்கு வியப்பாக இருந்தது.

‘‘சரி சரி போய் முதல்ல அதுங்கள பிடிக்கப் பாருங்க. என்ன மனுஷங்கப்பா.’’



வாசிக்க ஆரம்பித்தார்கள்.

ஆனால், ஒரு பாம்பு கூட புற்றை விட்டு எட்டிப் பார்க்கவேயில்லை.

ஒரு கட்டத்தில் அவர்களுக்கு நெஞ்சுக் கூடு வலிக்க ஆரம்பித்தது. வாசிப்பை நிறுத்தினார்கள்.

‘‘என்ன...?’’

‘‘சாமி... உள்ள ஒரு குஞ்சு குளுவான் கூட இல்லன்னு நினைக்கறோம் சாமி.’’

‘‘அப்படியா?’’

‘‘ஒரு வேள இரை தேடி வெளிய போயிருக்கும்ங்க. ராத்திரிலே வந்து ஊதுனா வெளிய வரலாம்க.’’

‘‘சரி சரி... ராத்திரி வந்துடுங்க. நானும் வரேன். நீங்க பாம்புகளை பிடிச்ச உடனே நானே புத்தை இடிக்கறேன்.’’

பி.ஏ. அலறினான்.

‘‘என்னய்யா?’’

‘‘பெரிய முதலாளிக்குத் தெரிஞ்சா?’’

‘‘நீ போட்டு விடலேன்னா அவருக்குத் தெரியாது. அவர் வந்து பார்க்கும் போது அந்தப் புத்து இருக்கற இடத்துல அழகா ஒரு ரெஸ்ட் ரூம் இருக்கும். ஒண்ணும் நடந்துடாது சரியா?’’

அதட்டினான். பி.ஏ. அரை மனதாகத் தலையாட்டினான்.

தோப்புக்கு வெளியில் கார் நின்று கொண்டிருந்தது. அதன் பம்பர் மேல் சுழன்று படுத்தபடி அவ்வளவையும் பார்த்துக் கொண்டிருந்தது புற்றில் இல்லை என்ற இருளர்கள் சொன்ன அந்த நாகம்!

## 2

நீள அகலங்களை அளந்து முடித்துவிட்டு, ‘‘சூப்பர் ஏரியா மிஸ்டர் ராஜ்குமார். நல்ல சாய்ஸ்’’ என்றபடி வந்தார் இன்ஜினீயர் ராமச்சந்திரன்.

இருளர்கள் போய்விட்டிருந்தார்கள். கருத்து சொன்ன அவரைப் பார்த்து கொஞ்சம் மதப்பாகச் சிரித்தான் ராஜ்குமார்.

''என்ன விலைக்கு இதை வாங்கலாம்னு நினைக்கிறீங்க?'' கேட்டான்.

''எப்படியும் சென்ட் ஒரு லட்சம் போகும்.''

''அப்ப, நூத்திப்பதினாறு சென்ட். கணக்குப் போட்டுக்குங்க. அந்தா இந்தான்னு ஒண்ணேகால் கோடிக்கு குறையாது.''

''பட் இட் ஈஸ் எ வெரிகுட் இன்வெஸ்ட்மென்ட் ராஜ்குமார். காவேரி வாட்டரும் குளுகுளுங்கற காத்தும் எத்தனை லட்சம் கொடுத்தாலும் கிடைக்காதே. ஆமா இந்த பாம்பு புத்து கொஞ்சம் தலைவலியா இருக்கும் போல இருக்கே உங்களுக்கு...?''

''ஆமாம் மிஸ்டர் ராமச்சந்திரன். இந்த விஷயத்துல இந்தியா மாதிரி ஒரு கொடுமைக்கார நாட்டை உலகத்திலேயே பாக்க முடியாது. கரையான் கட்டின புத்தை பாம்பு புத்துன்னு சொல்றதே பெரிய தப்பு. இதுல அது கோயில், அதை இடிக்கக் கூடாது. இடிச்சா அவ்வளவு தான்... அந்தப் பாம்பு வந்து பழி வாங்கிடும்னு டுமீல் விட்டா நல்லாவா இருக்கு...?''

''அப்ப இன்னிக்கு ராத்திரி இந்தப் புத்து அப்பளமாகப் போகுதுன்னு சொல்லுங்க...''

''பின்ன.. கோயில் கட்டி கும்பாபிஷேகமா பண்ணச் சொல்றீங்க?''

அத்தனை பெரிய தோப்புக்கென்று ஒரு காவல்காரன். பச்சமுத்து என்கிற பெயரோடு 'ஐயா' என்றபடி முன்னால் வந்தான்.

''என்னய்யா?''

''புத்து என்ன பண்ணிச்சு. அதை மட்டும் விட்ருங்க..''

''நீ யாருய்யா?''



''நான் நாப்பது வருஷமா இந்த தோப்புக்குக் காவக்காரனா இருக்கேங்க. என் அனுபவத்துல அது கண்கண்ட தெய்வமுங்க.''

''அதுசரி... உன் தெய்வத்துக்கு என் இடம்தான் கிடைச்சிச்சா... வேற இடத்துக்குப் போயிடச் சொல்லிடு. அங்கதான் மில்லுக்கான வாட்டர் சோர்ஸ் நல்லா இருக்கு. கிணறு தோண்டப் போறேன்.''

''வேண்டாங்க. இப்படித்தான் ஒரு வடநாட்டுக்கார ஆள் புத்தை இடிக்கப் போனான். இப்ப அந்த ஆள் எப்படி இருக்கான் தெரியுமா?''

பச்சமுத்து கொஞ்சம் பய மூட்டினான்.

''எப்படி...?''

''அதோ பாருங்க...''

அவன் கை காட்டிய திசையில் ஒருவன் கோயில் வாசல் பிச்சைக்காரனைப் போல தாடி, மீசை, அழுக்கு உடுப்பு என்ற தேக லாவண்யங்களோடு ராஜ்குமாரின் காரை ஒட்டி மரத்தடியில் உட்கார்ந்திருந்தான்.

ஆச்சரியமாக இருந்தது.

கிட்டே போய்க் கூர்ந்து பார்க்கவும், அவன் ஒரு சிரிப்பு சிரித்தான்.

பின் 'ஸ்ஸ்ஸ்...! என்றான்? தொடர்ந்து 'ஜமைக்காகி லபக்காகி... ஊள...' என்று கத்தினான்.

''என்னப்பா இது... என்ன பாஷை இது?''

''தெரியலீங்க. ரொம்ப நாளா இப்படித்தான். எப்பப்பாரு ஸ்... ஸ்... ஸ்...! ன்னு சொல்வாரு. ஒரு நாளைக்கு ஆயிரம் தடவையாவது அந்தப் புத்தைச் சுற்றி வந்துடுவாரு...''

''இது என்ன புதுக்கதை! போன வாரம் இந்த இடத்தைப் பாக்க வந்தப்போ இவர கண்ணுல படலியே?''

''இங்கதான் எங்கேயாவது மரத்தடியில படுத்துக் கிடப்பாரு. பாக்க பிச்சைக்காரன் மாதிரி இருக்கானேன்னு

மட்டும் நினைச்சுடாதீங்க. கையை ஆகாசத்துல காட்டி அப்படி இப்படிங்கறாரு. ஒரு ஐம்பது ரூபா நோட்டு வந்துடுது. இந்த ஏரியாக்காரங்க இவரை ஒரு சித்தராத்தான் பாக்கறாங்க.''

''சித்தராவா... இந்த ஆளையா...?''

''ஆமாம் சார்.. இவருக்கு புரியுதோ புரியலியோ, இவர்கிட்ட நின்னு உங்க குறையை நீங்க சொல்லிட்டுப் போனா அது உடனே நீங்கிடுது. லேசுப்பட்ட ஆள் இல்ல இவர். நான் நம்பறேன் சார்...''

ராமச்சந்திரன் அதுவரை ஒரு சிகரெட்டை ஊதிக் கொண்டிருந்தார். பச்சமுத்து சித்தர் என்று சொல்லவும், சிகரெட்டை சட்டென்று தூக்கி எறிந்தார்.

அவரை ஒரு மாதிரிப் பார்த்தார்.

சூப்பர் ஸ்பீடில் பக்தி வந்து தொற்றிக் கொண்டிருந்தது.

''என்ன சார்... இந்த டுபாக்கூர் கதையை நீங்க நம்பறீங்களா?''என்றான் ராஜ்குமார்.

''அவசரப்படாதீங்க மிஸ்டர் ராஜ்குமார். சித்தர்கள் விஷயம்லாம் நாம புரிஞ்சுக்கற லெவல்லையே இருக்காது... நான் கொஞ்சம் ஸ்வாமிகிட்ட பேசிட்டு வரேன்.''

- சுப்பிரமணிய சாமியை ஒதுக்கிய ஜெயலலிதா போல் அவர் ராஜ்குமாரை ஒதுக்கிவிட்டு அந்த வடக்கன் எதிரில் போய் நின்றார்.

''சாமி... ஆசீர்வாதம் பண்ணுங்க. உங்களைப் பாக்கும் போது அந்த மகாதேவனைப் பாக்கற மாதிரியே இருக்கு...''

- அவர் சொன்னதற்கு அந்த சாமீ திரும்பவும் தாடையைச் சொரிந்தது.

''சாமீ... ஒரு வாரத்துக்கு முந்தி ஒரு கனவு. நீ ஒரு மகானைப் பார்ப்பே. அவர் மூலமா உன் மகளோட நாகதோஷம் தீரும்னு ஒரு பெரியவர் கனவுல வந்து சொல்லிட்டு போனார். அது இவ்வளவு சீக்கிரம் பலிக்கும்னு நான் நினைக்கல சாமி...''



. இன்ஜினீயர் தாசானு தாச தாச மார்த்தாண்டராகவே மாறத் தொடங்கியிருந்தார்.

ராஜ்குமாருக்குள் கோபம் கொப்பளித்தது.

காரை நோக்கிப் போனான்.

வீறு கொண்டு கிளம்பினான்.

''நான் ஒண்ணும் கடவுள் நம்பிக்கை இல்லாத ஆள் இல்ல. ஆனா இது டூ மச். பாம்பு, ஓணான்லாம் சாமி, வைத்தியக்காரன்லாம் சித்தன்னா எங்க போய் முட்டிக்கறது?''

. உதடு உக்ரமாக சலித்துக் கொள்ள, காரிடமும் நல்ல வேகம். அதே சமயம் பக்கவாட்டில் இருந்து 'ஸ்ஸ்ஸ்' என்கிற சப்தம் கேட்பது போல தோன்றிது.

திரும்பினான்...

ஐயோ...! கறுப்பு ரப்பர் குழாய் போல ஒரு பாம்பு... பேரபோலா மூக்கினிடையே சிருட் சிருட்டென்று இரட்டை நாக்கின் வெளிப்பாடு. ஒரு அடிக்கு எம்பல் வேறு.

'ஏய்... ஆய்ய்... ஊ...' என்று அவனது தொண்டைக் குழியில் காற்று வித்யாச சப்தங்களை எழுப்ப, கார் பக்கவாட்டில் ஓடி காவேரி வாய்க்காலில் உருள ஆரம்பித்தது.

ராஜ்குமார் கண் திறந்தபோது எதிரில் நர்ஸ் ஒருத்தி சிரஞ்சில் மருந்தை நிரப்பிக்கொண்டிருந்தாள். ஊசியின் நுனி ஒரு மினியேச்சர் ஃபவுண்டன் போல மருந்தைப் பீய்ச்சிக் காட்டியது.

காதில் டாக்டரின் குரலும் வெங்கடாஜலபதிக் கவுண்டரின் குரலும் கேட்க ஆரம்பித்தது.

''உயிருக்கு ஆபத்தில்லீங்களே?''

''ஒரு ஆபத்தும் இல்ல. ஆனா நடக்கத்தான் ஒரு வருஷமாகும். அவ்வளவு ஃப்ராக்சர்!''

''எப்படியோ இந்த மட்டுல தப்பிச்சானே, அது போதுங்க. அந்தப் புத்தை சுத்தி மண்டபம் கட்டி பாதை போட்டு அப்படியே அதை ஊர் பஞ்சாயத்துக்கு எழுதிக் கொடுத்திடப் போறேன். அப்பத்தான் நாகம்மாவோட கோபம் தணியும். ராஜ்குமாரும் பூரண குணமாவான்...''

- வெங்கடாஜலபதிக் கவுண்டர் பேசிக்கொண்டே போனார். டாக்டர் மிரண்டு போனார்.

பின் கவுண்டரை அனுப்பிவிட்டு ராஜ்குமார் அருகே வந்தார்.

அவனும் அவரைப் பார்த்தான்.

''டாக்டர்...'' என்றான் ஈன சுரத்தில். ''டோன்ட் ஒர்ரி... நல்லாயிருவீங்க நீங்க...''

''அது இல்ல டாக்டர்... இப்பக் கூட அந்தப் பாம்பை நினைச்சா குலை நடுங்குது டாக்டர். பாம்பு பழி வாங்குமா டாக்டர்?'' நிறையவே பயந்தான் ராஜ்குமார். டாக்டர் சிரித்தார். பின் 'உம் வாங்குமே சினிமா கதைல...'' என்று ஜோக்கடித்தார்.

''அப்ப என் கார்ல எப்படி டாக்டர் பாம்பு வந்தது?''

''இது ரொம்ப தற்செயலான ஒரு விஷயம் மிஸ்டர் ராஜ்குமார்.''

''அப்படின்னா...?''

''தைரியமா இருங்க... பக்தி நம்பிக்கையெல்லாம் இந்த மாதிரி நேரத்துலதான் கோல் போடும். நம்ப கையில என்ன இருக்கு... எல்லாம் அந்த ஆண்டவன் செயல்னு பல நூற்றாண்டா ஒரு புலம்பல் இருக்கே, அது ஷைன் பண்றதே இந்த மாதிரி டயத்துலதான்.''

''டாக்டர் நீங்க நாத்திகவாதியா?''

''ஒரு அடையாளத்துக்கு அப்படியே வெச்சிக்கங்க... பொதுவுல பாம்புங்கறது ஒரு சாதுவான பிராணி. அது பால் சாப்பிடாது. மாணிக்கம் கக்காது. பழி வாங்காது. ஈவன்



தோ, காதே அதுக்கு கேக்காது. வைப்ரேஷன்தான் அதோட லாங்வேஜ். பயப்படறதுதான் அதோட குணம்.

இதுதான் பாம்பு ஆராய்ச்சியாளர்கள் கருத்து. இதை எடுத்துச் சொல்ல ஆள் இல்ல. ஆனா இதுக்கு ஒரு லோகத்தையே க்ரியேட் பண்ணி இஷ்டத்துக்கு சாமிங் களோட டை அப் பண்ணி, யோசிச்சா சிரிப்புத்தான் வருது ராஜ்குமார்.''

''அப்ப அந்தப் புத்தை இடிக்கறது தானே டாக்டர் நல்லது?''

''நம்மை விட பாம்புக்கு அது ரொம்ப நல்லது. என்னைக் கேட்டா நான் அப்படித்தான் சொல்வேன்.''

''தேங்க்யூ டாக்டர்! உங்க பேச்சு எனக்குக் கொஞ்சம் தைரியத்தை தந்திருக்கு. ஆனா எல்லாரும் என்னை மிரட்டிட்டாங்க. நீ தப்பவே முடியாது. உன்னை அந்தப் பாம்பு விடப் போறதில்லன்னு சொல்லி காபரா படுத்திட்டாங்க...''

''டோன்ட் ஒர்ரி... இது ஹாஸ்பிடல். இங்கல்லாம் அது வர முடியாது. வரவும் வராது. தைரியமா இருங்க. நான் அப்புறமா பாக்கறேன்.''

-தட்டிக் கொடுத்துவிட்டு உள் அறை நோக்கி நடந்தார்.

கோடிகளைப் போட்டுக் கட்டிய ஹாஸ்பிடல். திரும்பிய பக்கமெல்லாம் நவீனம். ஊடாடும் ஏ.சி. குளிர். அதில் கலந்து கமக்கும் குமட்டலான மருந்து வாசம்.

புது மூக்குதான் நுனி தேய்க்கும்.

பழகிய மூக்குக்கு ஒன்றும் தெரியாது.

இருந்தும் டாக்டருக்கு ஒரு புது வாசம் புகுந்து கமப்பதாக ஒரு உள்ளுணர்வு நிரடியது.

காதிலும் ஏதோ ஒரு சப்தம் கேட்கத் தொடங்கியது.

ஸ்... ஸ்... ஸ்...!

# 3

டாக்டருக்கு எலும்பில் ஊசி ஏறின மாதிரி இருந்தது. 'எங்கிருந்து வருகிறது சப்தம்?' நாலாபுறமும் பார்வையை விட்டார். நாசியில் அறையின் ஸ்ப்ரே வாசம். அதில் தொடர்ந்து 'ஸ்ஸ்ஸ்' சப்தம்.

பார்வையின் போக்கில் அந்தப் பகுதியில் வென்டிலேட்டர் எக்ஸாஸ்ட் ஃபேன் துவாரம் கண்ணில் பட்டது. அதில் ஒரு சாண் உயர நிமிர்வோடு 'ஸ்ஸ்ஸ்' என்றபடி தன் இரட்டை நாக்கை நீட்டிக் கொண்டிருந்தது ஒரு நாகம்!

''ஓ மை குட்னஸ்!'' - டாக்டரிடம் குரலோடு நரம்பறுந்துபோன மாதிரி ஒரு பதட்டம். அலறி அடித்துக்கொண்டு அங்கிருந்து ஓட ஆரம்பித்தார்.

ரிசப்ஷனில் நாற்பது கிலோ கூட தேறாத ஒரு ஒல்லிப்பெண். அவளை ஒட்டி சிலர்.

ஓடிவரும் டாக்டரை அவர்களும் பார்த்தார்கள்.

''பாம்பு... பாம்பு...'' என்று பம்மினார்.

''பாம்பா... எங்க டாக்டர்?''

''கமான்... அந்த காரிடார்ல வென்டிலெட்டர்கிட்ட.''

- அவர் அங்கிருந்து கொண்டே கையைக் காட்ட, சிலர் ஓடினார்கள்.

ஆனால், அங்கே அவர்கள் போன போது அந்தப் பாம்பு மிரட்டியது போதும் என்கிற மாதிரி ஓடி விட்டிருந்தது.

விஷயத்திடம் வீரப்பன் பற்றிய செய்தியைப் போன்ற வேகம். மற்ற சக டாக்டர்களும் வந்து கூட ஆரம்பித்தார்கள்.

''என்ன டாக்டர். பாம்பு கீம்புன்னு ஒரே சத்தம்?''

''யெஸ் டாக்டர் மிஸ்ரா. ஐ ஸா த ஸ்னேக். ஓ. இட்ஸ் ஸோ லாங்... தேர்... தேர்...''

-அந்த டாக்டரிடம் பரபரப்பு துளி கூட விலக வில்லை.



பாம்பை அடிக்கப் போனவர்கள் திரும்பி வந்திருந்தார்கள்.

''டாக்டர் அங்க எங்கையும் பாம்பக் காணோம் டாக்டர்'' என்று மூச்சிரைத்தனர்.

''டாக்டர், பாம்பு தானா... நல்லா பாத்தீங்களா?'' டாக்டர் ஒருவர் டவுட்டினார்.

''சந்தேகமேயில்லை... பாம்புதான்... ஓ மை காட்! இரட்டை நாக்கை ஸ்ருட் ஸ்ருட்னு அது நீட்டின விதம் இப்பக் கூட எனக்குப் புல்லரிக்குது.''

''அப்ப கொஞ்சம் நல்லா தேடிப்பாருங்கப்பா. கமான் க்விக் பீ கேர் ஃபுல்...''

. மிஸ்ரா என்னும் மூத்த டாக்டர் முடுக்கி விட, ஆஸ்பத்திரியே அல்லோலகல்லோலமாகத் தொடங்கியது.

படுக்கையில் இருக்கும் ராஜ்குமார் காதுக்கு விஷயம் வந்தபோது அதிர்ச்சியில் இதயம் வாய் வழியாக வெளி வரை வந்துவிட்டுத் திரும்ப உள்ளடங்கியது.

மனதுக்குள் 'ராஜ்குமார் நீ காலி...' என்கிற ஒரு பீதிக்குரலும் ஒலிக்க ஆரம்பித்தது.

தோப்பு வெறிச்சோடிப் போயிருந்தது.

புற்று அருகில் சில பெண்கள் பூஜித்தபடி இருந்தனர். விளக்கு போட்டு, பால்விட்டு, சுற்றி வந்து வணங்கும் அவர்களைப் பார்த்தபடியே ஒரு தென்னை மரத்தின் அடியில் அந்தப் பிச்சைக்கார சாமி படுத்துக் கொண்டிருந்தது. கவுண்டரும் இஞ்ஜினீயரும் காரிலிருந்து இறங்கி ஓடி வந்தார்கள்.

''சாமி... சாமி...'' குரலில் பதட்டம். அந்த மனிதரும் பக்தர்கள் அளித்த வாழைப்பழம் அதங்கிய வாயோடு ஏறிட,

''சாமி.. என் மகனை இந்தப் புத்துப் பாம்பு துரத்த ஆரம்பிச்சிடிச்சு போல தெரியுது சாமி. சின்னப் பையன் சாமி... தெரியாத்தனமா தப்பு பண்ணிட்டான். நீங்க மனசு

வெச்சா அவனைக் காப்பாத்த முடியும்னு எல்லாரும் சொல்றாங்க. கொஞ்சம் பெரிய மனசு பண்ணுங்க சாமி.'' - வெங்கடாஜலபதிக் கவுண்டர் பொதேலென்று கூக்குரலோடு காலில் விழுந்தார். பதிலுக்கு,

பிச்சைக்கார சாமி தேங்காய் பத்தையைக் கடித்து பச்சக் பச்சக் என்று வாயில் பால் சிதற விட்டபடி அசிரத்தையாக அவரைப் பார்த்தது.

''சாமி இப்படிப் பாக்கக் கூடாது. கவுண்டரும் அவர் மகனும் இந்தப் புத்தை இனி எந்தக் காலத்துலயும் தொடமாட்டாங்க. மண்டபம் கட்டி, பாதை போட்டு நாலு பேர் வந்து கும்பிடறதுக்கு என்ன உண்டோ அதை எல்லாமும் செய்யறேன்னுட்டார்.'' - இன்ஜினியர் வக்காலத்து வாங்கினார்.

''ஆமாம் சாமி... ஆஸ்பத்திரியில் என் மகன் பயந்துக்கிட்டு கிடக்கான். பாம்பு கண்ணுல பட்டா ஓடக் கூட வழி இல்ல அவனுக்கு. அதோட கோபத்தை தணிச்சு அந்தப் பாம்புகிட்ட இருந்து எங்களைக் காப்பாத்தணும் சாமி... உங்களுக்கு இந்தப் பாம்புங்க கட்டுப்படுமாமே... வாங்க சாமி!''

பிச்சைக்கார சாமிக்கும் அவர்களை அலட்சியப் படுத்தியது போதும் என்று தோன்றியதோ என்னவோ எழுந்து கொண்டது. பார்வையாலேயே 'போகலாமா?' என்று கேட்டது!

ஆஸ்பத்திரி முன் நின்ற காரில் இருந்து கவுண்டர் தபதபவென்று இறங்கினார். பின்னாலேயே இன்ஜினீயரும்...

கதவைத் திறந்துவிட்ட கூர்கா அவரைப் பார்க்கவும் ''என்ன அந்த பாம்பு பிடிபட்டுடுச்சா?'' என்றார் படபடப்பு குறையாமல்.

''அதை ஏன் சார் கேக்கறீங்க. ஒரு பாம்பா இரண்டு பாம்பான்னே தெரியலை... மேஜை டிராயரைத் திறந்தா 'ஸ்ஸ்ஸ்'ன்ன சத்தம், ஆபரேஷன் தியேட்டருக்குள்ள



போனா அங்க ஸ்ஸ்ஸ்ன்னு சத்தம்! போய்ப் பாருங்க. எனக்கே இங்க நிக்க பயமா இருக்குது...'' என்று கொஞ்சம் போல வெலவெலப்பைக் காட்டினான் அவன். மெல்ல காரில் இருந்து பிச்சைக்கார சாமியும் இறங்கி நின்று ஆஸ்பத்திரியை ஒரு பார்வை பார்த்தது.

ரிசப்ஷனில் கொத்தாக ஒரே கூட்டம். கையில் தடியுடன் சிலர் அங்கும் இங்கும் ஓடிக் கொண்டிருந்தார்கள்.

இன்ஜினீயர் அதைப் பார்த்து விட்டுப் படபடத்தார். ''யாரும் பாம்மை அடிச்சுடலையே...?''

''அடிக்க தைரியமில்லாமத்தானே மிரண்டு ஓடிக்கிட்டிருக்காங்க. அடிக்க நினைச்சாலும், டாக்டர் அடிக்காம பிடிக்கணும்னு வேற சொல்லிட்டாரே...'' யாரிடமிருந்தோ பதில் வந்தது.

குரல்கள் மட்டும் காதில் விழ, யார் பேசுகிறார்கள் என்பதே தெரியாத நிலையில் பிச்சைக்கார சாமி எல்லாவற்றையும் காதில் வாங்கிக் கொண்டே நடந்தது.

வார்டுகள் திறந்திருந்தன. உள்ளே பேஷண்ட்டுகள் மட்டும் அதிலும் நடமாட முடியாத பேஷண்ட்டுகள் மட்டும்!

அவர்களும் எழுந்து கட்டிலுக்கு நடுவில் குத்துக்காலிட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தார்கள்.

ரிசப்ஷனில் டாக்டர்கள் கவுண்டரை ஒரு மாதிரிப் பார்த்தனர்.

''தான் மட்டும் தனியா உள்ள போறாரே, இவரே பிடிச்சுடுவாரா.. இல்ல பாம்பாட்டிங்களுக்கு சொல்லி விடலாமா?'' ஒரு டாக்டர் தயங்கித் தயங்கிக் கேட்டார்.

''வாயக் கழுவுங்க...பாம்பாட்டிங்களோட போய் அதைப் பிடிக்கப் பார்த்ததுலதானே என் மகன் இப்ப இந்த ஆஸ்பத்திரியில கிடக்கான்.''

- கவுண்டர் சீறினார்.

''நோ.. சம்திங் ராங்! சம்திங் ராங்...'' - என்று சொன்னபடி கையைப் பிசைந்தார் ஒரு வயதான டாக்டர்.

அந்தக் கூட்டத்தில் ஒரு மஃப்டி போலீஸ்காரரும் இருந்தார். பேஷண்டை பார்க்க வந்தவர் போலத் தெரிந்தது. அவர் முகத்தில் ஏகத்துக்கும் சிந்தனைச் சுருக்கம்.

நேரம் நொடிகளில் இறங்கி நிமிடங்களுக்கு தாவி எல்லோரையும் வெடவெடப்பிலும் படபடப்பிலும் போட்டுத் தாளித்துக் கொண்டிருக்க, உள்ளே போன பிச்சைக்கார சாமி வெளியே வர ஆரம்பித்தது. அதன் கையிலும் கழுத்திலும் தோளிலும் நெளிந்தபடி பாம்புகள்!

''புடிச்சுட்டார் பார்த்தீங்களா?'' இன்ஜினீயர் பரவசப்பட்டார்.

''ரியலி இட் ஈஸ் எ மிராகிள்...!'' முணுமுணுப்புகள்.

மஃப்டி போலீஸ்காரர் மட்டும், இந்த மூஞ்சியை நான் எங்கேயோ பார்த்திருக்கேனே' என்று தாடையைத் தேய்க்கத் தொடங்கியிருந்தார்.

## 4

அந்த போலீஸ்காரர் மட்டும் வித்தியாசமாக தாடியை வருடிக் கொண்டு யோசிக்க, மற்றவர்களில் பலர் பொதேல் பொதேல் என்று பிச்சைக்கார சாமியின் காலில் விழுந்தனர்.

சாமி எதுவும் பேசவில்லை. சிரித்தது... பார்வையாலேயே கவுண்டரைப் பார்த்து, போகலாமா என்று கேட்டது.

''ஆஹா தாராளமா சாமி.. தாராளமா...''

-கவுண்டர் சேர்ந்து கொண்டு நடந்தார். தொண்டரடிப் பொடியாக உடன் ஓடினார் இன்ஜினீயர்.

எல்லோரும் பார்த்துக் கொண்டே நின்றார்கள். கவுண்டரின் காரில் ஏறிக்கொண்டு மொத்தப் பாம்புகளோடும் அந்த பிச்சைக்கார சாமி போன பின்புதான் மூச்சு விட்டார்கள்.

''ஏய்யா என்னய்யா இது... அந்த ஆள் எப்படிய்யா பிடிச்சான்..?



''ஆளு, கிளுங்காதீங்க டாக்டர் சரவணன். அவர்கிட்ட ஏதோ சக்தி இருக்குன்னுதான் தோணுது.''

''சர்தான் நீங்களும் தொபேலா? தேவுடா..!''

விதம்விதமான கருத்துக்கள். பரிவர்த்தனைகள். ராஜ்குமார் மட்டும் டென்ஷன் நீங்காமல் இருந்தான்.

அவனது விஞ்ஞான நம்பிக்கைகளை 'ஸ்ஸ்ஸ்' சப்தம் குரூரமாகக் கிழித்து காயப்படுத்திவிட்டது.

அடி வயிறும் அமிலப் பாத்திரமாகவே மாறி விட்டது.

ஆனால், அந்த போலீஸ்காரர் மட்டும் ஒரு முடிவுக்கு வந்தவரைப் போலப் புறப்பட ஆரம்பித்திருந்தார்.

★ ★ ★

புற்றுக்குள் பாம்புகள் சமர்த்தாக நுழைந்து கொண்டன. பிச்சைக்கார சாமி அவைகளை உள்ளேவிட்டு விட்டு கை கூப்பியபடி நிற்கும் கவுண்டரைப் பார்த்தது.

''சாமி... இனிமே எனக்கு நீங்க சொல்றதுதான் வேதம். இந்தப் பாம்புங்கதான் என் தெய்வம்.''

- கவுண்டர் எல்லை மீறி பக்தி பொழிந்தார். சாமி அனுக்ரகம் செய்வதுபோல கையைக் காட்டிற்று. பின் எங்கே மட்டை கிடக்கிறது என்ற பார்த்தபடி தேடிப் போய் படுத்துக் கொண்டது.

பின்னால் ஓடினார் கவுண்டர். ''சாமி... இனியும் நீங்க இப்படி மட்டைல படுக்கறது நல்லா இல்லை. உங்களுக்கு நான் ஒரு நல்ல ஆசிரமமே கட்டிக் கொடுக்கறேன்'' என்றார்.

சாமி அவரை முறைத்துப் பார்த்தது. இன்ஜினீயர் அதன் முறைப்பைப் புரிந்து கொண்டவராட்டம் கவுண்டரைப் பார்த்து சொல்லத் தொடங்கினார்.

''சாமி இப்ப நம்மளைப் போன்னு சொல்லுது. அதுக்கு இப்படிப் பேசறது பிடிக்கல போல இருக்குது.''

''அப்படின்னா இப்ப போயிட்டு பொறவு வருவோம்.''

- கவுண்டர் சொன்னபடி கும்பிடு போட்டுவிட்டு பின்னேறத் தொடங்கினார்.

புற்று அருகில் ஒரு பெரும் கூட்டமே நின்று பார்த்துக் கொண்டிருந்தது.

கவுண்டர் பார்த்துக் கொண்டே காரில் ஏறி புறப்பட்டுப் போனார்.

★ ★ ★

அர்த்த ராத்திரி...

காவிரி ஆற்றில் ஒரு பரிசல்.

தோப்பை ஒட்டிய கரைத் திட்டில் மோதி நிற்க, அதிலிருந்து ஒருவன் வேகமாக இறங்கத் தொடங்கினான்.

டார்ச்சைத் தட்டிவிட்டு அதன் ஒளிவட்டத்தோடு தோப்புக்குள் நுழையவும் ஆரம்பித்தான்.

''கோசல்ராம்... கோசல்ராம்...'' அவனிடம் இருந்து அழைப்பொலி.

சப்தம் ஒரு தென்னை மட்டை மேல் கிடந்த பிச்சைக்கார சாமியின் காதிலும் பட்டு எதிரொலித்தது. அடுத்த நொடியே துள்ளிக் கொண்டு எழுந்தது.

''ஏய். ராஜேந்தர் நான் இங்க இருக்கேன்.''

- பதில் குரல் கேட்டு ராஜேந்தர் என்னும் அவன் அந்த பிச்சைக்கார சாமியை நோக்கி நடந்தான்... கிட்டே நெருங்கி, பெரிதாக மூச்சு வாங்கினான்.

''எப்படிடா வந்தே... தப்பிச்சா?''

''என்னன்னு தெரியல... திடீர்னு பெய்ல்ல விட்டுட்டாங்க...''

''ஆச்சரியமா இருக்குதே...!''

''ஆச்சரியப்பட என்ன இருக்கு. எவ்வளவு நாளைக்கு என்கொயரி என்கொயரின்னு சாகடிக்க முடியும். நானும்



அலைஞ்சு கொடுக்கல. வெறுத்துப் போய் விட்டுட்டாங்கன்னு நினைக்கறேன். அது சரி... இங்கேயும் பெரிசா ஏதோ பிரச்சனை போல இருக்குதே?''

''ஆமாண்டா... புத்தை இடிக்கறேன்னு இந்தத் தோப்பை வாங்கின ஒருத்தன் கிளம்பிட்டான். வழக்கம் போல பல் எடுத்த பாம்புங்களை வெச்சு சமாளிச்சேன். உசுரை வாங்காம வாங்கினேன். ஆனா இனியும் சமாளிக்க முடியாது.''

''ஏன்?''

''இதை வாங்கின கவுண்டர் கோயில் கட்டித் தரேன், எனக்கு ஆசிரமம் கட்டித் தரேன்னு ரொம்ப தூரம் போயிட்டார்...''

''கவலைப்படாதே... வெளிய வந்த நிமிஷம் எல்லா ஏற்பாட்டையும் செய்துட்டேன். நாம இப்ப இங்க இருந்து சீக்கோட கிளம்ப வேண்டியதுதான்.''

''அது அவ்வளவு சுலபமில்லை. புத்துல இருக்கற அந்தப் பெரிய பாம்பை நினைச்சா எனக்கே திகைப்பா இருக்கு. உனக்காகத்தான் காத்துக் கிட்டிருந்தேன்.''

''சரிவா.. ஆத்துக்கு மறுகரைல புஜங்கராவ் வேனோட காத்துக்கிட்டிருக்கான். உம் சீக்கிரம்...''

- இருவரும் பேசிக் கொண்டே புற்றை நோக்கி நடந்தார்கள். டார்ச் ஒளி வட்டத்தில் ஆறடி உயரத்தில் ஏகப்பட்ட கூம்புகளோடு அதுவும் அவர்களைப் பார்த்தது.

''கோசல்ராம் எப்படியோ இத்தனை மாசம் சமாளிச்சுட்டே. இப்ப நினைச்சாலும எனக்கு ஆச்சரிய மாயிருக்கு. இந்தப் புத்து மட்டும் இல்லேன்னா நானும் சரி, நீயும் சரி பத்து வருஷத்துக்கு உள்ள கம்பி எண்ணி யிருப்போம். இல்ல?''

''பேச்சு அப்புறம். முதல்ல சரக்கை வெளிய எடுக்கற வழிய பார்ப்போம். அந்தப் பெரிய பாம்பு வரும்போது மட்டும் ஜாக்கிரதை...''

“எதுக்கு இருக்கு பிஸ்டல்.. ஒரு தோட்டா போதுமே. அதை பீஸ் பீஸாக்க...”

“துப்பாக்கிய தொடாம அத அடிக்கற வழியப் பார். சத்தம் கேட்டா தோப்பு வாட்ச்மேன் முழிச்சுக்கலாம்.”

“அப்ப அவனுக்கும் ஒரு தோட்டாவை பாஸ் பண்ண வேண்டியது தான்.”

“நான் கழுவற தண்ணில நழுவற மீனா இருக்கணும்னு பாக்கறேன். நீ காரியத்தைக் கெடுத்துடுவ போல இருக்குதே. முட்டாள். டார்ச்சை பிடி. நானே எடுக்கறேன்.”

கோசல்ராம் என்று அழைக்கப்பட்ட அந்தப் பிச்சைக்கார சாமி புற்றை சமீபித்து தன் காலால் புற்றின் ஒரு கூம்பை உதைத்தான். பொலபொலவென்று உதிரத் தொடங்கியது அது. உள்ளே ஒரு ரப்பர் ட்யூபைப் போல சுருண்டு கிடந்த நாகமொன்று சீறிக் கொண்டு நிமிர்ந்தது.

“அடச்சீ.. போ அந்தப் பக்கம்...”

- நாகதாளி வேரை மணிக்கட்டில் கட்டியிருக்கும் நிலையில் அதைப் பிடித்து எங்கோ விட்டெரிய, அது படுத்துக்கிடந்த இடத்துக்குக் கீழே ஒரு ஐம்பொன் சிலை ஒன்றின் கைப்பகுதி மட்டும் தெரியத் தொடங்கியது அதைப் பார்த்த நொடி, பிச்சைக்கார சாமியான கோசல் ராமின் கண்களில் கோழி முட்டை சைசுக்கு விரிவு.

“என்ன... பத்திரமா இருக்கா?” ராஜேந்தர் என்னும் அவன் கூட்டாளியும் ஆவலாக எட்டிப் பார்த்தான்.

“இல்லாம... பல மாசமா தேவுடு காத்துருக்கேனே?”

“சரி சரி... மொத்தத்தையும் எடு...”

“எடுக்கறேன். இன்னிக்கு நீ வரலேன்னாலும் இதை எடுக்கறதாத்தான் இருந்தேன். நானே புஜங்கராவுக்கு தகவல் கொடுத்து சரக்கை அனுப்பிடலாம்னும் நினைச்சேன்.

“அதான் வந்துட்டேனே. இப்ப எதுக்கு அந்தப் பேச்சு. உம் சீக்கிரம்...”



- ராஜேந்தர் துடித்தான். தொடர்ந்து புற்று உடைபட உடைபட கோசல்ராமால் கொண்டு வரப்பட்ட நாகங்கள் பொக்கை வாயைப் போட்டுக் கொண்டு விடைக்க, அதை கோசல்ராமாகிய அந்தப் பிச்சைக்கார சாமியும் பிடித்துப் பிடித்து விட்டெறிந்தான்.

கொஞ்சம் கொஞ்சமாய் உள்ளே ஒரு நாராயண விக்ரகம் அற்புத வேலைப்பாடுகளோடு அபய ஹஸ்த காத்தோடு தென்படத் தொடங்கியது. நூறு கிலோவுக்கு மேல் இருக்கும் போலத் தோன்றியது. ஸ்வாமியின் கால்மாட்டில் சுருண்டபடி படுத்துக் கிடந்தது அந்தப் புற்றையே தன் வீடாகக் கொண்டிருந்த கிழட்டு நாகம்!

அதைப் பார்த்த நொடி கோசல்ராமும் ராஜேந்திரரும் சற்று மிரண்டு போய் நிற்க, ராஜேந்தர் தன் இடுப்பு பெல்ட்டை அவிழ்க்கத் தொடங்கினான்.

“நான் இதால இதைப் பாத்துக்கறேன். நீ சிலையைத் தூக்கிடு...”

“முடியாது ராஜேந்தர். ஒரு ஆளால தூக்க முடிஞ்சா நான் எப்பவோ தூக்கியிருப்பேனே?”

“அப்ப நகரு.. முதல்ல அதைப் பரலோகம் அனுப்புவோம்.”

- சொன்னபடி ராஜேந்தர் அதை நோக்கி பெல்ட்டை கழற்றிக்கொண்டு நடந்தான்.

அது அச்சத்தோடு பின்னேற ஆரம்பித்தது..

“உம் சீக்கிரம்.” கோசல்ராம் பரபரக்க ராஜேந்தர் பெல்ட்டை கழற்றி விசிற, எங்கிருந்தோ கும்பலாக ஒரு வெளிச்சக்கோடு அவர்கள் மேல் விழ ஆரம்பித்தது.

இருவரும் அதிர்ந்து போய்த் திரும்பினார்கள். அடுத்தடுத்து அங்கங்கே வெளிச்சப் பாய்ச்சல்கள். அவ்வளவும் போலீஸ் ஜீப்புகளின் ஹெட் லைட் துப்பிய வெளிச்ச எச்சங்கள்!

வெளிச்சங்களில் திபுதிபுவென்று அவர்கள் ஓடிவந்து இருவரையும் வளைத்துக் கொள்ளவும் தொடங்கினார்கள்.

அவர்களில் பிரதானமாக இருந்தார் பகலில் ஆஸ்பத்திரி விஜயம் செய்திருந்த அந்த மஃப்டி போலீஸ்காரர். அந்த நிலையிலும் மகா கிண்டல் உணர்வோடு.

''நமஸ்காரம் சாமி.. உங்க ஆசீர்வாதம் வேணும். அதுக்காகத்தான் வந்திருக்கேன்..'' என்றபடி கோசல் ராம் எதிரில் கை கூப்பினார்.

கோசல்ராமிடம் ஏராள மிரளல்.

ராஜேந்தரம் திணறிப் போனான். 'ஒருநாள் போலீஸ் துரத்தலுக்கு நடுவே சிலையைக் கடத்திவந்தபோது புற்றைத் தட்டிவிட்டு அதற்குள் சிலையைப் போட்டு மண்ணைக் க்ரைத்து கொட்டி மூடி இத்தனை நாள் காவல் காத்தது எல்லாம் இப்படி வசமாக ஒரு அர்த்த ராத்திரியில் மாட்டிக் கொள்ளத்தானா? அன்றைய கடத்தலில் ராஜேந்தர் மட்டும் மாட்டிக் கொள்ள, கோல்ராம் தப்பிவிட, லாக்கரை விட பெரிய பாதுகாப்பாக புற்றைப் கருதியது இப்படி மாட்டிக் கொள்ளவா?' சலிப்புடன், கையில் பிடித்திருந்த பாம்பைத் தூக்கி எறிந்தான். எதுவும் பேசாமல், சுற்றி வளைத்து நின்ற போலீஸோடு நடக்க ஆரம்பித்தான்.

## முற்றும்